**Crmp. No. 1816/2025**
PW .1
Name : திருமதி. மாணிக்கம்
24.12.2025

கடந்த 06.05.2025ம் தேதி நான்குநேரியில் உள்ள கொசமற்றம் பைனான்ஸில் 3 பவுண் தங்க நகையை ரூ.95,000/- த்திற்கு அடமானம் வைத்து பணத்தை பெற்றுக்கொண்டேன். பின்னர் ஜீலை மாதம் 7ம் தேதி பணத்தை திருப்பி செலுத்தி மேற்படி நகையை மீட்க வேண்டி கொசமற்றம் பைனான்ஸிற்கு சென்றேன். அடமானம் வைத்ததற்கான ரசீதை கொசமற்றம் பைனான்ஸ் ஊழியரிடம் கொடுத்தேன். அவர்கள் ரசீதை பார்த்துவிட்டு மேற்படி நகையை ரூ.50000 கூடுதல் தொகைக்கு நந்தினி என்பவரின் பெயரில் தவறுதலாக தெரியாமல் ரூ.1,45,000/- அடமானம் வைத்ததாக கூறினார். இதுகுறித்து மேற்படி நந்தினியிடம் பைனான்ஸ் ஊழியர் விசாரித்தபோது தான் எந்த ஒரு நகையும் அடமானம் வைக்கவில்லை என கூறியதாக என்னிடம் சொன்னார். அதன்பிறகு முருகன் என்பவரின் பெயரில் எனது நகை அடமானம் வைக்கப்பட்டதாக கூறினார்கள். முருகன் என்பவர் எனக்கு யார் என்று தெரியாது. பைனான்ஸ் ஊழியர் என்னிடம் நகை பத்திரமாக உள்ளது என்றும், ஒரு வாரம் கழித்து வருமாறு கூறினார். அதனால் நான் சென்றுவிட்டேன். பின்னர் ஒரு வாரம் கழித்து கொசமற்றம் பைனான்ஸிற்கு சென்று, நகையை பற்றி கேட்டேன். அதற்கு பைனான்ஸில் பணிபுரிந்த 4 நபர்கள் என்னிடம் நகையை கொடுக்க முடியாது என கூறி, என்னை தகாத வார்த்தையால் பேசி அலுவலகத்திலிருந்து இருந்து என்னை வெளியே தள்ளிவிட்டனர். இதனால் நான் மறுநாள் நான்குநேரி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். அவர்கள் மேற்படி புகார் சம்பந்தமாக காவல்நிலையத்தில் விசாரணைசெய்யவில்லை. அதன்பிறகு நான் சட்ட பணிகள் ஆணையகுழுவிடம் புகார் அளித்தேன். மேற்படி ஆணையகுழுவிடம் நானும், கொசமற்றம் பைனான்ஸில் பணிபுரியும் மேலாளார் ஆஜரானோம். மேற்படி விசாரணையில் மேலாளார் நீதிமன்றம் மூலமாக நகையை பெற்றுக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். அதனால் நான் கொசமற்றம் பைனான்ஸிலிருந்து எனது நகையை என்னிடம் ஒப்படைக்கவேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன். அடமானம் வைத்த தொகையை திருப்பி செலுத்துவதற்கு தயாராக உள்ளேன்.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN
Date: 2025.12.24 17:31:43 +0530